புதுப்புனல்
கலை இலக்கிய மாத இதழ்

# அகமும் புறமும்

- கோவை ஞானி

கொழும்பிலிருந்து பன்னிரண்டு ஆண்டு களாகத் தொடர்ந்து வெளிவரும் தரமான இலக்கிய இதழாகிய 'ஞானம்' இதழின் ஆசிரியன் திரு. ஞானசேகரன். 150வது 'ஞானம்' சிறப்பிதழ் என்ற முறையில் சிறப்பாக அணியப்படுத்தியிருக்கிற போர் இலக்கியம் என்ற 600 பக்க அளவிலான இலக்கிய இதழை, கொழும்பில் சென்ற மாத இறுதியில் வெளியிட்ட கையோடு தமிழகத்திற்கு, தன் மகனோடு வந்தார். திருச்சி, தஞ்சை, சென்னை, கோவை முதலிய நகரங்களில் தமிழ்ப் படைப்பாளிகளுக்கு, தமிழின் மிக முக்கியமான இந்த நூலை அறிமுகப்படுத்துவது அவரது நோக்கம். இம்மாதம் முதல்வராக இறுதியில் கோவையில் சிபி அகாடமியில் இலக்கிய நண்பர்கள் பலரை அவர் சந்தித்து உரை யாடினார். போர் இலக்கியம் என்பது புலம்பெயர் தமிழிலக்கியம் என்பது போல தமிழிலக்கிய பரப்பில் இன்னொருவகை என்றார். ஈழத்தில் போர் நடைபெற்ற முப்ப தாண்டுக்கிடையிலான போர்த் தொடர்பாக எழுதப்பட்ட 45 கட்டுரைகள், 43 கவிதைகள், 26 சிறுகதைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தப் பெருநூல் இலங்கையில் விலைரூ, 1500/ – தமிழகத்தில் விலை ரூ. 600/– என்று குறிப்பிட்டார். தரமான இலக்கிய தொகுப்பு. ஈழத் தமிழ்றிஞர்க்கே இது சாத்தியம். ஈழம் மக்கள் விடுதலைக்கு துரோகம் செய்த 'இந்திய' தமிழராகிய நாம் இதற்காகவும் தான் தலை குனியவேண்டும். ஈழப்போருக்கு அனுசரணை யான படைப்புகள் மட்டுமல்லாமல் ஈழப்போரை திறனாய்வுக்கு உட்படுத்தும் கட்டுரைகள் முதலியனவும் இத்தொகுப்பில் உள்ளன. குறைந்த கால அளவில் முக்கியமான கட்டுரைகள் பலவற்றை நான் படித்துப் பார்த்த பொழுது பெரும் வியப்படைந்தேன். இத்துணை தரமாக நம்மவரால் எழுத முடியுமா? என்பதும் என் சிந்தனை.

போர்க் காலத்திலேயே தம் வெவ்வேறு இனம் என்ற முறையில் வடக்கில் உள்ள தமிழர்க்கும் கிழக்கில் உள்ள இசுலாமியர்க்கிடையில் கடுமையான மோதல்

ஏற்பட்டது. தமிழ் குழுக்களுக்கிடையிலும் பிளவும் மோதலும் ஏற்பட்டன. இவை குறித்தெல்லாம் இலக்கிய படைப்புகள் எழுந் துள்ளன. ஈழத்துப் பெண்களின் போர்த்திறன் குறித்தும் கல்வித்திறன் குறித்தும் நம் அனை வருக்கும் நன்கு தெரியும். இந்திய அமைதிப் படை செய்த அக்கிரமங்கள் குறித்தும் படைப் புகள் இத்தொகுப்பில் உள்ளன. கட்டுரைகள் அனைத்தும் ஆய்வுத் திறன் மிக்கவை. அனைத்தும் விவரத் தொகுப்புகளாக உள்ளன. குறிப்பாக சொல்வதென்றால் நம் காலத் தமிழிலக்கியத்திற்கு மாபெரும் வரவு என்ற முறையில் நம் அனைவராலும் கொண்டாடப் பட வேண்டிய தொகுப்பு இந்தப் பெருநூல்.

'ஞானம்' இதழாசிரியர் திரு. ஞானசேகரன் கோவை இலக்கிய சந்திப்பின்போது தன்னைப் பற்றியும் சில விவரங்களை வெளிப்படையாக எங்களோடு பகிர்ந்துகொண்டார். சென்ற ஆண்டு கொழும்பில் சனவரியில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு பற்றி, மாநாட்டில் தன் பங்கு பற்றிக் கூறினார். தனக்கென அரசியல் சார்பு இல்லையென்றாலும் ஈழத் தமிழரின் விடுதலையை தான் என்றும் போற்றி வந்தது குறித்துச் சொன்னார்.

மருத்துவராக மலையக தமிழர் மத்தியில் பல்லாண்டுகள் பணியாற்றியபோது மலை யகத்திலும் தமிழ்மக்களுக்கு எதிராக சிங்களப் பேரினவாதம் செயல்பட்டது பற்றித் தான் எழுதிய 'குருதிமலை' என்ற தன் நாவல்பற்றிச் சொன்னார். இலங்கையில் தமிழ்க் குடும்பங்கள் எங்கு வாழ்ந்தபோதிலும் போரின் பாதிப்புக்கு உள்ளாகாத குடும்பம் என்று எதுவும் இல்லை என்றார். தன் குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட சில கடுமையான பாதிப்புகள் குறித்தும் சில விவரங்கள் மட்டும் கூறினார். தமிழில் முதன் முறையாக திருத்தமான தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் உரையை பதிப்பித்தவராகிய மரியாதைக்குரிய கணேச ஐயரின்பேரன்தான் திரு. ஞானம். தரமான இலக்கிய ஆய்வித ழாகிய 'ஞானம்' இதழுக்கு நிகராக தமிழ் இதழ் இன்று எதையும் குறிப்பிடுவதற்கு இல்லை. கடுமையான போர்க்காலத்திலும் இடை

விடாமல் மாதந்தோறும் இலக்கிய இதழை இவர் கொண்டு வந்திருக்கிறார். ஈழத்தில் நடைபெற்ற விடுதலைப்போர் தொடர்பாக நாமும் தான் அங்கும் இங்கும் என சில கவிதைகள், கட்டுரைகள் எழுதியிருகிறோம். இவற்றின் தரம் பற்றியும் தகுதிபற்றியும் நம்மால் பெரிதாகச் சொல்வதற்கில்லை என்றாலும் ஈழத்தின் போர்த் தொடர்பான ஒரு சிறு இலக்கியத் தொகுப்பையாவது நம்மவர் தொகுத்து பார்த்துக் கொள்ளத்தான் வேண்டும். போர் இலக்கியம் எனப் புறநானூற்றைக் கொண்டாடும் தகுதி ஈழத் தமிழருக்குத்தான் இருக்கிறது. இந்தியாவிற்குள் முடங்கியிருந்தது எதை நாம் சாதித்துக் கொண்டோம். தன்மானம் முதலிய பலவற்றை இழந்ததை தவிர.

●